[9th August 1966

முன்னிட்டு, அவர்கள் அடிக்கடி தங்கள் குழந்தைகளைப் பார்த்து வந்தால் நல்ல முறையில் பணிபுரிவார்கள் என்ற உத்தேசத்திலாவது, இங்கெல்லாம் பாலர் விடுதிகள் ஏற்படுத்த நம் சுகாதார அமைச்சர் முன்வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த உத்தியோகம் செய்யும் பெண்களுடைய சௌகரியத்திற்காக 'க்ரிசே' ஆரம்பிக்க வேண்டியதுதான். ஆனால், இங்கே கோட்டையில் ஆரம்பிப்பது உசிதம் இல்லை என்று நினைக்கிறேன்.

Beggar Homes

* 286 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the estimated number of able bodied, diseased, and invalid beggars respectively found in Madras City; and

(*b*) the number of Care Homes together with their capacities to take in these beggars?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) முறையே 1,256, 274, 288.

(இ) சென்னையில் இரண்டு பிச்சைக்கார விடுதிகள் உள்ளன. சென்னை கார்ப்பரேஷன் பிச்சைக்கார விடுதியில் 300 நபருக்கும் தயாசதன் விடுதியில் 600 நபருக்கும் இடமுள்ளன.

திரு. வை. சங்கரன் : சென்னையை எடுத்துக் கொண்டால் 1,800 பேர்களுக்கு மேல் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் உடல் நலம் குன்றியவர்களும், உடல் நலம் உள்ளவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்காக தனித்தனி ஹோம்கள் வைத்திருக்கிறோம். இவர்களை தரப்படி சட்டத்தின் கீழ் பிடித்து வைக்க சர்க்கார் என்னென்ன ஏற்பாடு செய்கிறார்கள் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இதற்கெல்லாம் என்னென்ன செய்யவேண்டும் என்று பார்த்து 'பெக்கர் ந்யூசன்சை'ப் போக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் : சார், சென்னை நகரத்தில் நிறைய பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களைத் தடுக்க என்ன திட்டம் இருக்கிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : மெட்ராஸ் ப்ரிவென்ஷன் ஆப் பெக்கிங் ஆக்ட், 1945, என்கிற சட்டத்தை அமண்ட் செய்து, 1—5—1966 முதல் அமலுக்கு வந்திருக்கிறது. அந்தச் சட்டப் பிரகாரம் அவர்களை, ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஹோம்களில் பிடித்து வைக்க வேண்டும். பிடித்துப் போடுகிறோம். உடல் நலம் உள்ளவர்களுக்கு ஏதாவது உத்தியோகம் வாங்கிக் கொடுக்க வேண்டும். பிடித்துக் கொண்டு வைத்தாலும் அவர்கள் ஓடிப் போய் விடுகிறார்கள். போலீஸ் உதவியோடு என்னென்ன செய்ய வேண்டுமோ அந்த வகையில் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.